Chapter X*XIII Code of Criminal Procedure)*

| *IN THE COURT OF`* | | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | |
|---|---|---|---|
| Calendar | | SC.No.647/2022 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W. 11 |
| | | Defence | |
| Name | | திரு.பாஸ்கர் | |
| Father's Name | : | திரு.துரைச்சாமி | |
| Village | : | மூங்கிலடி | |
| Taluk | : | நாங்குநேரி | |
| Calling | : | அரசு தரப்பு சாட்சி | |
| Age | : | 54 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 17th day of June 2026.

( 1 முதல் 5 எதிரிகள் ஆஜர். 8 வது எதிரி ஆஜர் இல்லை. 8 வது எதிரி தரப்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.)

<u>முதல் விசாரணை</u> :-

நான் தற்போது மூங்கிலடியில் குடியிருந்து வருகிறேன். சாட்சிகள் செல்லத்துரை, மகேந்திரன், சேகர்ராஜா ஆகியோரை தெரியாது. இந்த வழக்கில் இறந்துபோன கிருஷ்ணகுமாரை தெரியும். ஆஜர் எதிரிகள் யாரையும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் எதிரி ராஜசேகர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும்

தெரியாது. சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எனது கையெழுத்து உள்ள பேப்பரில் எழுதாத வெள்ளைத்தாளில் தான் கையெழுத்து போட்டக்கொடுத்தேன். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள எனது கையொப்பங்கள் மட்டும் **அ.சா.ஆ.2** மற்றும் **அ.சா.ஆ.3** ஆகும். என் முன்பு எதிரிகள் யாரையாவது கைது செய்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, சான்றுப்பொருட்களை கைப்பற்றினார்களா என்றால் இல்லை. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். ஆவணங்களை பரிசீலனை செய்த பிறகு அனுமதி வழங்கப்பட்டது)

<u>குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)</u>

கடந்த 13.10.2014ம் தேதி மாலை 6.50 மணிக்கு நானும் செல்லத்துரையும் கோவில்பத்து டாஸ்மாக் கடையில் பிராந்தி வாங்கிக்கொண்டு களக்காடு ஆத்தங்கரை தெரு வழியாக பைக்கில் சென்றுகொண்டிருந்தபோது கோமதி பெண்கள் மேல்நிலைப்பள்ளி அருகே சிமெண்ட் கலர் அப்பாச்சி பைக்கில் எதிரி சுடலைமணியும், அவரது பின்னால் எதிரி டென்ஸ் ஆகிய இருவரும் ஆத்தங்கரை ரோட்டில் மேற்காக திரும்பும் போது அவர்கள் கையில் இருந்த சாக்குப்பையில் இருந்து ஒரு அரிவாளும், வாளும் கீழே விழுந்தது என்றும், பின்னர் சென்றுகொண்டிருந்த வாகனத்தை நிறுத்தி அரிவாளையும், வாளையும் எடுத்துக்கொண்டு மூங்கிலடி நோக்கி சென்றார்கள் என்றும், அவர்களை நானும் செல்லத்துரையும் பின்தொடர்ந்து சென்றபோது அவர்கள் சிவனாம்பேரி ரோட்டில் உள்ள

எதிரி சூசை அந்தோணி வீட்டிற்கு சென்றார்கள் என்றும், பின்னர் இரவு 7.30 மணியளவில் லைட் வெளிச்சத்தில் பார்க்கும்போது எதிரிகள் டென்ஸ், சூசை அந்தோணி, சுடலைமணி, குமார், பாலாஜி, வேகவேகமாக கிழக்காக நடந்து சென்றார்கள் என்றும், அப்போது அவர்கள் கையில் அந்த சாக்குபையில் ஆயுதங்கள் இருந்தது என்றும், சிறிது நேரம் கழித்து ஆத்தாங்கரை ரோட்டில் கிருஷ்ணகுமாரை மேற்படி வெட்டிகொலை செய்துவிட்டதாக சேகர்ராஜா என்னிடம் கூறினார்என்றும், பின்னர் 29.10.2014ம் தேதி காலையில் நானும் மகேந்திரனும் களக்காடு காவல்நிலையம் பக்கம் நடந்த வந்துகொண்டிருந்தபோது காவல் ஆய்வாளர் எங்களை கூப்பிட்டு எதிரி ராஜசேகர் என்பவரை போலீஸ் காவலுக்கு எடுத்து வந்த விவரத்தை கூறி சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன்பேரில் காலை 6.30 மணிக்கு எங்கள் முன்பு எதிரி ராஜசேகரை விசாரிக்க அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் காலை 10.00 மணிக்கு களக்காடு புதுத்தெரு ஆலமரம் பக்கம் வைத்து நாராயணன் மகன் கனகராஜ் என்பவரிடம் இருந்து எதிரி வாங்கி ஆஜர் செய்த வெள்ளை கலர் நோக்கியா செல்போன், ஏர்செல் சிம்கார்டு ஆகியவற்றை ஆய்வாளர் எங்கள் முன்பு அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியிலும் நாங்கள் இருவரும் கையெழுத்து செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :-

நான் கையெழுத்து போட்டுக்கொடுத்த போது அது எழுதாத வெள்ளைத்தாளாக இருந்தது. அதில் எந்த எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை எழுதினார்கள் என்று தெரியாது.

மறுவிசாரணை இல்லை.